"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசான ஜே.சீ. ஆர். ரணகம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016,ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 1539, 2017, ஏப்பிறல் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 1738, 2017 யூன் 19 ஆந் திகதியிடபப்பட்ட இல. 1860 மற்றும் 2017, ஒற்றோபர் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2066 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தனஞ்சன சம்பத் தூல்வல மற்றும் வீபெத்தெ வீரகோன் முதியன்சேலாகே நிரூஷா குமாரி பாலமகும்புர என்பவர்கள் பங்காளர்களாக நடாத்திவரும் பெயர் மற்றும் வடிவில் " மல்லிக்கா டிரேடிங் கம்ப்லெக்ஸ்" எனும் வியாபாரத்தின் மீது கடன்பட்டவர்கள் என்ற வகையில் கூறப்பட்ட தனஞ்சன சம்பத் தூல்வல மற்றும் வீபெத்தை வீரகோன் முதியான்செலாகே நிரூஷா குமாரி பாலமகும்புர என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 1539, 1738, 1860 மற்றும் 2066 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் முப்பத்தி ஒரு கோடியே இருபத்தி எட்டு லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐந்நூற்று பதின் எட்டு ரூபா பதின் ஏழு சதம் (ரூபா. 312,844,518.17) 2018 சனவரி 29 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட முப்பத்தி ஒரு கோடியே இருபத்தி எட்டு லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐந்நூற்று பதின் எட்டு ரூபா பதின் ஏழு சதம் (ரூபா 312,844,518.17) 2018 சனவரி 30 ஆந் திகதி முதல் இலக்கங்கள். 1539, 1738, 1860 மற்றும் 2066 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா (ரூபா. 12,000,000) கட்டணத்திற்காக மாதாந்தம் Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.5% per annum) மேலும் இரண்டு கோடியே பத்து லட்சம் ரூபா (ரூபா. 21,000,000) கட்டணத்திற்காக மாதாந்தம் Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.5% per annum) மேலும் ஐந்து கோடி ரூபா (ரூபா. 50,000,000) கட்டணத்திற்காக மாதாந்தம் Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.25% per annum) மேலும் எட்டு கோடியே ஐம்பத்தி ஐந்து லட்சம் ரூபா (ரூபா. 85,500,000) கட்டணத்திற்காக மாதாந்தம் Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.25% per annum) மேலும் பதின் ஒரு கோடிகே ஐம்பது லட்சம் ரூபா (ரூபா. 115,000,000) கட்டணத்திற்காக மாதாந்தம் Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.25% per annum) மேலும் ஒரு கோடியே இருபத்தி நான்கு லட்சத்து தொண்ணூற்றி ஒன்பதினாயிரத்து எண்ணூறு ரூபா (ரூபா. 12,499,800) இத்துடன் மேலதிக வட்டியாக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு தசம் ஐந்து சைபர் வீதம் (8.50%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள், 1539, 1738, 1860 மற்றும் 2066 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமா பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அடடவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்ததும்பரவின் உடகம்பாஹா கோரலேயின் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவின் குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் கெங்கல்லை கிராம அலுவலர் பிரிவற்குள் கெங்கல்லையில் அமைந்த குண்டசாலை வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 1231, 1231/1 ஐ ஏற்ற "பரகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பீ. டீ. வேத்தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 13 ஆந் திகதியிடப்பட்ட (2007, சனவரி 21 ஆந் திகதி உபபிரிவாக்கப்பட்ட) இல. 1482 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 6645 எனும் வரைபடத்தின் லொட்கள் 1 மற்றும் 2; கிழக்கு : கண்டி முதல் தெல்தெனிய வரையான வீதி மற்றும் வீதி மார்க்கங்கள்; தெற்கு : லொட் 1C (10 அடிகள் அகல வீதி) (லொட் C என பதிவு செய்யப்பட்டுள்ளது) மற்றும் ; மேற்கு : இல. 1482 எனும் வரைபடத்தின் லொட் 1B (லொட் B என பதிவு செய்யப்பட்டுள்ளது) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ரூட்கள் மற்றும் இருபத்தி ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ, 29.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1482 எனும் வரைபடத்திற்கு

அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 50/137 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. கெங்கல்லை கிராம அலுவலர் பிரிவிற்குள் கெங்கல்லையில் அமைந்த குண்டசாலை வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 1231, 1231/1 ஐ ஏற்ற "பரகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பீ. டீ. வேத்தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 13 ஆந் திகதியிடப்பட்ட (2007 சனவரி 21 ஆந் திகதி உபபிரிவாக்கப்பட்ட) இல. 1482 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 6645/P எனும் வரைபடத்தின் லொட் 2; கிழக்கு : இல. 1482 எனும் வரைபடத்தின் லொட் 1A (லொட் 1B பதிவு செய்யப்பட்டுள்ளது) மற்றும் லொட் 1C (அதே காணியின் எஞ்சிய பகுதி) மற்றும் எஸ். கே. அல்லாபிச்சை ராவுத்தர் உரிமை கோரும் காணி; தெற்கு : கே. கே. அல்லாபிச்சை ராவுத்தர் உரிமை கோரும் காணி மற்றும் ; மேற்கு: பிட்ட எல மற்றும் இல. 6645/P எனும் வரைபடத்தின் லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1482 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 64/100 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கூறப்பட்ட கெங்கல்லை கிராம அலுவலர் பிரிவிற்குள் கெங்கல்லையில் அமைந்த குண்டசாலை வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 1231, 1231/1 ஐ ஏற்ற "பரகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பீ. டீ. வேத்தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993 ஒற்றோபர் 13 ஆந் திகதியிடப்பட்ட (2007 சனவரி 21 ஆந் திகதி உபபிரிவாக்கப்பட்ட) இல. 1482 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1C எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 1A; கிழக்கு : கண்டி முதல் திகன வரையான பிரதான வீதி; தெற்கு : எஸ். கே. அல்லாபிச்சை ராவுத்தர் உரிமை கோரும் காணி மற்றும்; மேற்கு : லொட் 1B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1482 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 65/116 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட 1A, 1B மற்றும் 1C தற்போது எல்லைகளிடப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டு மீள் அளவீடு செய்யப்பட்டு கீழ் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.கெங்கல்லை கிராம அலுவலர் பிரிவிற்குள் செங்கல்லையில் அமைந்த குண்டசாலை வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 1231, 1231/1 ஐ ஏற்ற "பரகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். கே. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 47 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஏ. டீ. சீ. விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 6645/P எனும் வரைபடத்தின் லொட் 1 இன் எஞ்சிய பகுதி; கிழக்கு : கண்டி முதல் திகன வரையான பிரதான வீதி; தெற்கு : கே. கே. அல்லாபிச்சை ராவுத்தர் உரிமை கோரும் காணி; தென் மேற்கு : ஹீன்கெந்த கும்புர மற்றும் வனாத்தையை பிரிக்கும் பிட்ட எல மற்றும்; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஏ. டீ. சீ. விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு இல. 6645/P எனும் வரைபடத்தின் லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அமைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 47 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 169/131 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4 - 523/1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப் பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

எல்ல மௌண்ட் ஹெவன் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல. 0046 1000 2787

2018, பெப்புருவரி 15 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. பீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஒற்றோபர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 1009, 2015, ஓகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 1317, 2015, திசெம்பர் 29ஆந் திகதியிடப்பட்ட இல. 1445, 2016, யூலை 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 1693, 2016, செத்தெம்பர் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 1771 மற்றும் பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. பீ. காஹாந்தவ மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான எச்.சீ. லக்மினி என்பவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, மே 29 மற்றும் 30 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 2104/68

எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு PV 100376 எனும் பதிவு இலக்கத்தைக் கொண்ட பெயர் மற்றும் வடிவில் "எல்ல மௌண்ட் ஹெவன் (பிறைவெட்) லிமிட்டெட்" எனும் வியாபாரத்தின் மீது கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட கூறப்பட்ட ரணசிங்ஹ ஆரச்சிகே சரணபால, பிரதீபா ஷிரானி சமரசிங்ஹ சிறிவர்தன மற்றும் ரணசிங்ஹ ஆரச்சிகே தனுஷ்க லக்மால் என்பவர்கள் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள். 1009, 1317, 1445, 1693, 1771 மற்றும் 2104/68 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இருபத்திரண்டு கோடியே அறுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து அறுபத்தொரு ரூபா ஐந்து சதம் (ரூபா 22,67,55,061.05), 2018, சனவரி 18 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இருபத்திரண்டு கோடியே அறுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து அறுபத்தொரு ரூபா ஐந்து சதம் (ரூபா 22,67,55,061.05) 2018, சனவரி 19 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 1009, 1317, 1445, 1693, 1771 மற்றும் 2104/68 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பன்னிரெண்டு கோடியே எண்பத்தி ஏழு லட்சத்து முப்பத்தி எட்டாயிரம் ரூபா (ரூபா. 12,87,38,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) (Prevailing rate of 15.55% per annum) மேலும் இரண்டு கோடி ரூபா (ரூபா 20,000,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) (Prevailing rate of 15.55% per annum) மேலும் நான்கு கோடி ரூபா (ரூபா 40,000,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) (Prevailing rate of 15.55% per annum) மேலும் ஒரு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் ரூபா (ரூபா 14,990,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) (Prevailing rate of 13.55% per annum) மேலும் ஐம்பது லட்சம் ரூபா (ரூபா 5,000,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) (Prevailing rate of 15.55% per annum) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 1009, 1317, 1445, 1693, 1771 மற்றும் 2104/68 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியு. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், கும்பல்வெல கோரலே, எல்ல பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் ராவணா எல்ல 69 - F கிராம அலுவலர் பிரிவின் FVP 280 ராவணா எல்ல கிராமத்தில் அமைந்த "அராவெஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். பீ. குணரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 2245 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன– வடக்கு : FVP 280 இன் லொட் 73 மற்றும் மால கந்துர; கிழக்கு: கிரிந்தி ஓய; தெற்கு: அட்டக்கெஹெல ஆர மற்றும் ஆர (உலர்ந்த) மற்றும் ; மேற்கு : பிரதான வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு ஏக்கர்கள் மூன்று றூட்கள் மற்றும் முப்பத்தி இரண்டு தசம் ஏழு பேர்ச்சஸ்கள் (12ஏ. 3றூ. 32.7பே.) அல்லது 5.242 ஹெக். விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2245 எனும் வரைபடத்திற்கு அமைவாக பதுளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் U 2/118 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4-523/2

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(டேம் வீதி கிளை)

வாடிக்கையாளரின் பெயர் : மொஹமட் இம்ரான் ரஷாக்

2018, பெப்புருவரி 28 ஆந் திகதிய தீர்மானத்தினால் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"மேற்கூறப்பட்ட கடப்பாடுடையவரான /ஈடுவைத்தவரான மொஹமட் இம்ரான் ரஷாக், பதிவு இல. பீகியு. 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க இன்சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. டி. ஜே. எஸ். மாயாதுன்னே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு

25.09.2015 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 849 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட முறி இல. 849 இன் மூலம்

(அ) 2018, பெப்புருவரி 08 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதிவரை ஒரு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து அறுபத்தோராயிரத்து நூற்று ஐம்பது ரூபா இருபத்தொரு சதம் (ரூபா. 1,53,61,150.21) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு இருபது சதவீத (20%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது ஒரு கோடி அறுபத்திரண்டு இலட்சத்து எண்பத்தைந்து ஆயிரத்து நூற்று பதின்மூன்று ரூபா இருபத்து மூன்று சதம் (ரூபா. 1,62,85,113.23) கொண்ட தொகை மற்றும் 07.02.2018 ஆந் திகதி வரையான வட்டி

மற்றும்

(ஆ) 2018, பெப்புருவரி 08 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதிவரை இருபத்தைந்து இலட்சத்து ரூபா (ரூபா. 25,00,000.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு இருபத்தாறு சதவீத (26%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தேழு இலட்சத்து எண்பதாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூபா. 27,80,958.90) கொண்ட தொகை மற்றும் 07.02.2018 ஆந் திகதி வரையான வட்டியும்

தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட முறியின்மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ஒரு கோடியே தொண்ணூறு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து எழுபத்திரண்டு ரூபா பதின்மூன்று சதம் (ரூபா. 1,90,66,072.13) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் துஷித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (தெல்கந்தை பதிவுப் பிரிவிற்குள்), சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைகளுக்குள், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், 538 சீ சாரணங்கர கிராம அலுவலர் பிரிவு, வட்டார இல. 6, சரணங்கர, களுபோவிலையில் அமைந்துள்ளதும் பஹத்தியா மாவத்தை, வரிமதிப்பு இல. 59 ஐக்கொண்டதும் ''கஹட்டகஹவத்தை மற்றும் கஹட்டகஹவத்தை ஓவிட்ட என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன்வல அவர்களால் தயாரிக்கப்பட்டு 21 மாச்சு 2007 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6613 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். அனில் பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 27 ஏப்பிறல் 1978 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2250 இல் துண்டு பீ1 மீள்நிலஅளவையாக இருக்கின்ற மீண்டும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 11 யூலை 2006 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 244 இல் துண்டு பீ1 இன் ஒரு மீள்நிலஅளவையாகவும் உப பிரிவாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைளாவன - வடக்கு : துண்டு 2; கிழக்கு : துண்டு 5 (12 அடி அகல வீதிக்கான ஒதுக்கு); தெற்கு : துண்டு 6 மற்றும் பஹத்தியா மாவத்தை; மேற்கு : கல்லினால் கட்டப்பட்ட வடிகால். இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 6613 இற்கு அமைய ஆறு பேர்ச்சுக்கள் (0ஏ 0றூ. 6பே.) விஸ்தீரணமுடையது, இது தெல்கந்தை காணி பதிவத்தில் தொகுதி/பக்கம் எவ் 192/83 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு 1 பின்வரும் காணியின் ஒரு மீள்நில அளவையாகவும் உப பிரிவாகவும் இருக்கின்றது :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (தெல்கந்தை பதிவுப் பிரிவிற்குள்), சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைகளுக்குள், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், 538 சீ சாரணங்கர கிராம அலுவலர் பிரிவு, வட்டார இல. 6, சரணங்கர, களுபோவிலையில் அமைந்துள்ளதும் பஹத்தியா மாவத்தை, வரிமதிப்பு இல. 59 ஐக்கொண்டதும் ''கஹட்டகஹவத்தை மற்றும் கஹட்டகஹவத்தை ஓவிட்ட என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 11 யூலை 2006 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 244 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பீ1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். அனில் பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 27 ஏப்பிறல் 1978 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2250 இல் துண்டு பீ1 மீள்நிலஅளவையாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு பீ1 இன் எல்லைகளாவன - வடக்கு : கொஸ்தாவின் நெல் வயல்கள்; கிழக்கு : குணதாச பொன்சேக்காவிற்கு சொந்தமான ஸ்ரீ மஹா விஹார வீதி, வரிமதிப்பு இல. 78 ஐக் கொண்ட வளவுகள் மற்றும் ஹரிதாச பொன்சேக்கா விற்கு சொந்தமான ஸ்ரீ மஹா விஹார வீதி, வரிமதிப்பு இல. 80 ஐக் கொண்ட வளவுகள்; தெற்கு: பஹத்தியா மாவத்தை; மேற்கு : நிலஅளவை வரைபடம் இல. 2250

இல் துண்டு பீ2 (ஓடை). இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 244 இற்கு அமைய இருபத்தொன்பது தசம் எட்டு நான்கு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 29.84பே.) விஸ்தீரணமுடையது.

பின்வரும் காணிகளின்மீதும் வழியேயும் இதன் கீழுமான வழியுரிமைகளுடன் சோத்து :-

மேற்சொல்லப்பட்ட வட்டார இல. 6. சரணங்கர, களுபோவிலையில் அமைந்துள்ளதும் '' கஹட்டகஹவத்தை மற்றும் கஹட்டகஹவத்தை ஓவிட்ட'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி பி.தொடன்வல அவர்களால் தயாரிக்கப்பட்டு 21 மாச்சு 2007 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 6613 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5 (வீதிக்கான ஒதுக்கு) (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். அனில் பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 27 ஏப்பிறல், 1978 திகதியிடப்பட்ட வரைபட இல. 2250 இல் துண்டு பீ1 இன் மீள் நிலஅளவையாக இருக்கின்ற மீண்டும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 11 யூலை, 2006 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 244 இல் துண்டு பீ1 இன் ஒரு மீள்நில அளவையாகவும் உப பிரிவாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 5 இன் எல்லைகளாவன, வடக்கு : துண்டுகள் 2 மற்றும் 3; கிழக்கு : துண்டுகள் 3 மற்றும் 4; தெற்கு : துண்டு 6; மேற்கு : துண்டுகள் 1 மற்றும் 2, இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 6613 இற்கு அமைய மூன்று தசம் சைவர் எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 3.08பே.) விஸ்தீரணமுடையது. தெல்கந்தை காணிப் பதிவகத்தில் தொகுதி /பக்கம் எவ் 192/84 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

4 - 524

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.02.07 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2012.09.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2468 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2013.01.07 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2553 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2014.04.10 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2956 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2015.10.16 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3683 ஆகியவற்றின் பேரில் பன்னல, குருணாகல வீதி, இல 231 இன் அமைந்த (ஸ்மார்ட் டிசைன் சென்றர் பங்காளர்) திரு. ஹெட்டி பத்திரென்னஹலாகே அசோக குணவர்தன மற்றும் (ஸ்மார்ட் டிசைன் சென்றரின் பங்காளர்) திருமதி தனன்கொடகமகே யனிதா ஷர்மிலா ஆகியோரிடமிருந்து முதலும் 2017.12.19 வரை வட்டியும் நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது இருபத்தொரு இலட்சத்து முப்பத்தேழு ஆயிரத்து ஐநூற்றேழு ரூபாய்களும் அறுபத்தைந்து சதங்களும் (ரூபா. 21,37,507.65) மீள் அட்டவணைக்கடன் வசதி 'A' மீது தொன்னூற்றைந்து இலட்சத்து நான்கு ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றெட்டு ரூபாய்களும் ஒன்பது சதங்களும் (ரூபா. 95,04,798.09) மீள் அட்டவணைக்கடன் வசதி 'B' மீது ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து தொண்ணூற்று ஆறு ரூபா எண்பத்திரெண்டு சதங்களும் ) (ரூபா. 1,40,096.82) அத்துடன் இருபது இலட்சம் ரூபாய்கள் (ரூபா. 2,000,000.00) நிரந்தர மேலதிகப்பற்று வசதி தீர்க்காத முதல் மீது 2017.12.20 தொடக்கம் ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்திலும், மீள் அட்டவணைக்கடன் வசதி 'A' தீர்க்காத முதல் எட்டு மில்லியன் நாநூற்று இருபத்தெட்டு ஆயிரத்து இருநூற்று எழுபத்து நான்கு ரூபாய்களும் ஐம்பத்து மூன்று (ரூபா. 8,428,274.53) சதங்களில் 2017.12.20 தொடக்கம் ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்திலும் மீள் அட்டவணைக்கடன் வசதி 'B தீர்க்காத முதல் நூற்று முப்பத்தெட்டு ஆயிரத்து நூற்று ஐம்பத்தாறு ரூபாய்களும் பதினாறு சதங்களில் (ரூபா. 138,156.16) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2017.12.20 தொடக்கம் விற்பனைத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

"2. பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2012.09.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2468 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2013.01.07 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2553 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2014.04.10 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2596 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2015.10.16 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3683 ஆகியவற்றின் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று வசதி மற்றும் இரண்டு மீள் அட்டவணை வசதிகள் மீது மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே பதினேழு இலட்சத்து எண்பத்திரெண்டு ஆயிரத்து நாநூற்று இரண்டு ரூபா ஐம்பத்தாறு சதமும் (ரூபா 1,17,82,402.56) அத்துடன் 2017.12.20 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலங்கை வங்கி

கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமையவும் கண்டி, டொறிங்டன் வீதி, இல. 24 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரமவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பன்னல கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கட்டுகம்பொல ஹத்பத்து மெதபற்று கோரளை மேற்கில் பன்னல பிரதேசசபை எல்லைகளுள் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பன்னல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பன்னல கிராமத்தில் அமைந்த ''கட்டுவேவத்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுமனரத்ன B அபேகோன் தயாரித்த 2011.11.29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 10786 இல் விபரித்து பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : முன்னர் பொடி சிங்யோவுக்கு சொந்தமானதும் தற்போது கே.ஏ.ஏ. பொடி அப்புஹாமியின் வாரிசுகளுக்கு சொந்தமான காணியும் ; கிழக்கு : முன்னர் பொடி சிங்யோவுக்குச் சொந்தமான காணியின் பாகமும் தற்சமயம்கே.ஏ.ஏ.பொடி அப்புஹாமியின் வாரிசுகளின் காணியும் (தற்சமயம் தனியார் பாதை) உம் ; தெற்கு : பிரதான வீதியும் ; மேற்கு : பாதையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் எட்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 8.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் L 282/163 மற்றும் E 02/25 வரை கொண்டு செல்லப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காக உள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. கே.ஏ.பீ.எஸ். கஹந்தாவ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பன்னல.

4 - 557

---

## ஸ்டேட் பேங் ஒவ் இந்தியா

### திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஸ்டேட் பேங் ஒவ் இந்தியாவின் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவெட்) லிமிட்டெட் மற்றும் ஜே அன்ட் டி பொலி பெக்கேஜிங் (பிறைவெட்) லிமிட்டெட்டின் ஒன்றிணைப்பை தொடர்ந்து ஒரு ஒன்றிணைப்பு கம்பனியாக இருக்கின்ற (ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவெட்) லிமிட்டெட் என முன்னர் அறியப்பட்ட) திருவாளர்கள் ஜே அன்ட் டி பொலி - பெக்கேஜிங் (பிறைவெட்) லிமிட்டெட்

கணக்கு இல. 25260304320219, 25260304060274

ஸ்டேட் பேங் ஒவ் இந்தியாவின் மத்திய சபையின் நிறைவேற்று குழுவினால் 22.11.2017 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

''ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவெட்) லிமிட்டெட் மற்றும் ஜே அன்ட் டி பொலி பெக்கேஜிங் (பிறைவெட்) லிமிட்டெட்டின் ஒன்றிணைப்பை தொடர்ந்து ஒரு ஒன்றிணைப்பு கம்பனியாக இருக்கின்றதும் ஜே. அன்ட் டி பொலி பெக்கேஜிங் (பிறைவெட்) லிமிட்டெட் மற்றும் ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவெட்) லிமிட்டெட் (''கம்பனி'') என குறிப்பிடப்படுகின்றதும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதும் பொரலஸ்கமுவை, கட்டுவாவளை, 10 ஆவது மைல்கல், இல. 17/30 இல் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலத்தை கொண்டுள்ளதும் ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவேட்) லிட்டெட் மற்றும் ஜே அன்ட் டி பொலி பேக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் ஒன்றிணைப்பை தொடர்ந்து ஒரு ஒன்றிணைப்பு கம்பனியாக இருக்கின்ற ஜிங் சங் இண்டஸ்ரியல் (பிறைவேட்) லிமிட்டெட் என முன்னர் உள்ள பெயரிலிருந்து தற்போது பெயரை மாற்றியுள்ளதுமான திருவாளர்கள் ஜே அன்ட் டி பொலி-பெக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட், இத்துடனுள்ள முதலாவது அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகளை முதன்மை ஈடு என்ற வகையில் வங்கிக்கு அடைமானமாகவும் ஈடாகவும் வைத்திருக்கின்ற, ஸ்டேட் பேங் ஒவ் இந்தியா இன் சார்பில் கையொப்பமிட்டுள்ள (ஈடுவைத்தவரான) கம்பனியின் பணிப்பாளர் ஜியோங் ஹோ லீ மற்றும் (கடப்பாடுடையவரான) கம்பனி ஆகியோரினால் கையொப்பமிடப்பட்ட, கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சீ. ஆர். டி. பெர்ணான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 05 மே, 2010 திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சீ. ஆர். டி. பெர்ணான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 12 ஒகத்து, 2014 ஆந் திகதியிடப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687 ஆகியவற்றின்மீது ஸ்டேட் பேங்க் இந்தியாவிற்கு வர வேண்டிய பணங்களின் கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்களாதலாலும்:

கம்பனியானது, இத்துடனுள்ள இரண்டாவது அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை வங்கிக்கு அடைமானமாகவும் ஈடாகவும் வைத்திருக்கின்ற, ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியா இன் சார்பில் கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சீ. ஆர். டி. பெர்ணான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 30 யூலை, 2010 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1505 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சீ. ஆர். டி. பெர்ணான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 25 மே, 2012 ஆந் திகதியிடப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687 ஆகியவற்றின்மீது ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியாவிற்கு வரவேண்டிய பணங்களின் கொடுப்பனவில் தவணைதவறியுள்ளதாலும்:

கம்பனியானது, இத்துடனுள்ள மூன்றாவது அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும்

வளவுகளை வங்கிக்கு அடைமானமாகவும் ஈடாகவும் வைத்திருக்கின்ற, ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியா இன் சார்பில் கடப்பாடுடையவர்களான கம்பனி மற்றும் ஜே அன்ட் டி வென்ச்சர் (பிறைவெட்) லிமிட்டெட் அத்துடன் ஈடுவைத்தவரான கம்பனி லிமிட்டெட்டினால் கையொப்பமிடப்பட்ட கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எதிரிசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 02 நவெம்பர், 2010 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சீ. ஆர். டி. பெர்னான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 25 மே, 2012 திகதியிடப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 ஆகியவற்றின்மீது ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியாவிற்கு வரவேண்டிய பணங்களின் கொடுப்பனவில் தவணைதவறியுள்ளதனாலும்:

சொல்லப்பட்ட ஜே அன்ட் டி வென்ச்சர் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, கம்பனிக்கு அளிக்கப்பட்ட வசதிகளுக்கு மட்டும் பிணைகளான சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 இருந்த போதிலும் சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 ஆகியவற்றின்மீது வங்கிக்கு வரவேண்டியும் உரியதாகவுமுள்ள ஒவ்வொன்றும் எல்லாமுமான தொகைகள் மற்றும் பணத்தொகைகள் முழுமையாக செலுத்தி தீர்த்துள்ளது.

சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687, சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1505 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1584 அத்துடன் சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 ஆகியவற்றின்மீது 01 செத்தெம்பர், 2014 ஆந் திகதியிலிருந்து முழுக் கொடுப்பனவு திகதிவரை ஆண்டிற்கு 6% வட்டியுடன் சேர்த்து 31 ஒற்றோபர், 2017 ஆந் திகதியன்றுள்ளவாறு மொத்த நிலுவையாகவிருக்கின்ற ஐந்து இலட்சத்து தொண்ணூற்றெண்ணாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு ஐ. அ. நா. டொலர்கள் நூறில் ஐம்பத்து நான்கு சதங்கள் (ஐ. அ. நா. டொலர் 5,98,836.54) இலங்கை ரூபாவிற்கு சமமாக ஒன்பது கோடி பதினெட்டு இலட்சத்து ஓராயிரத்து அறுநூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்தொரு சதம் (இலங்கை ரூபா 9,18,01,641.51) கொண்ட தொகை சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687, சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1505 மற்றும் குறை நிரப்பு ஈட்டு முறி இல. 1584 அத்துடன் சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 ஆகியவற்றின்மீது கம்பனியிலிருந்து வங்கிக்கு வரவேண்டியும் உரியதாகவும் உள்ளதாதலாலும் :

வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687, சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1505 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1584 அத்துடன் சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 ஆகியவற்றின்மீது வங்கிக்கு வரவேண்டிய அதுநாள்வரை முழுமையாக கொடுத்துத் தீர்க்க வேண்டிய மொத்த கடன்தொகை, LIBOR வீதம் (இலண்டன் உள்ள - வங்கியினால் அளிக்கப்பட்ட வீதம்)* சொல்லப்பட்ட வசதிகளின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறியவிடத்து அல்லது தவறியவிடத்து ஒத்துக்கொள்ளப்பட்ட செலுத்தா கடன்களை செலுத்தும் வரை ஆண்டிற்கு ஆகக்குறைந்தது ஆறு சதவீதம் (6%) உடன் நாலரை சதவீதம் (4.50%) மேலும் வட்டியுடன் சேர்த்து விளம்பரச் செலவுகள், ஏனைய விற்பனை செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட தொகை ஐந்து இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு ஐ. அ. நா. டொலர்கள் நூறில் ஐம்பத்து நான்கு சதங்கள் (ஐ. அ. நா. டொலர் 5,98,836.54) இலங்கை ரூபாவிற்கு சமமாக ஒன்பது கோடி பதினெட்டு இலட்சத்து ஓராயிரத்து அறுநூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்தொரு சதம் (இலங்கை ரூபா 9,18,01,641.51) கொண்ட தொகையை அறவிடுவதற்காக சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687 இனால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள கம்பனியின் ஆதனம் மற்றும் வளவுகளை, சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1505 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1584 இனால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை அத்துடன் சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 158 மற்றும் சொல்லப்பட்ட குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1585 இனால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள மூன்றாம் அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகளை டல்லாஸ் கெலார்ட்ஸின் ஒக்ஸன்ஸ் (பீவீரீ) லிமிட் இன் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டல்லார்ஸ் கெலார்ட் அவர்களுக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கு, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணைகள்

### முதன்மை ஈட்டு முறி இல. 1491 மற்றும் குறைநிரப்பு ஈட்டு முறி இல. 1687 இல் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் அட்டவணை

(அ) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (கல்கிஸ்ஸை பதிவுப் பிரிவிற்குள்), சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் நாவலை, வெலிக்கடையில் அமைந்துள்ளதும் நான்கு படுக்கை அறைகள், வாழும் மற்றும் சாப்பாட்டு அறை, மூன்று குளியல் அறைகள் மற்றும் நீரோட்டமுள்ள கழிவறைகள், பயன்பாட்டு அறை, முற்றம் மற்றும் இரண்டு பல்கனிகள் கொண்ட ரோயல் பார்க் கூட்டாட்சி ஆதனம் என அறியப்பட்ட கட்டிடத்தின் கோபுரம் ஏ இன் பத்தாவது தளத்தில் அமைந்துள்ளதும் இராஜகிரி, லேக் டிரைவ், வரிமதிப்பு இல. 115 10/1 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பி. தொடன்வெல

அவர்களால் தயாரிக்கப்பட்டு 24 மே, 1997 திகதியிடப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடம் இல. 2627 இல் குறிப்பிடப்பட்ட சுதந்திர குடியிருப்பு கூட்டாட்சி ஆதன கூறு இல. 1A/F10/U1 (வகை C) சொல்லப்பட்ட கூறு இல. 1A/F10/U1 (வகை C) இன் எல்லைகளாவன :- வடக்கு : இந்தக் கூறு மற்றும் மேலே CE 25 முகப்பு மற்றும் CE 10 A (தாழ்வாரம்) ஆகியவற்றிற்கு இடையிலான சுவரின் மத்தி; கிழக்கு : இந்தக் கூறு மற்றும் CE10A (தாழ்வாரம்) CE 28 (படிகட்டு) ஆகியவற்றிற்கு மற்றும் இடையிலான சுவரின் மத்தி மற்றும் கூறு இல. 1A/F10/U6; தெற்கு : இந்தக் கூறு மற்றும் கூறு இல. 1A/F10/U6 மற்றும் மேலே CE25 முகப்பு இற்கு இடையிலான சுவரின் மத்தி; மேற்கு : இந்தக்கூறு மற்றும் மேலே CE 25 முகப்புக்கு இடையிலான சுவரின் மத்தி; உச்சி : மேலே இக்கூறு கூறு இல. 1A/F11/U1 இன் கொங்கிறீட் தளத்தின் மத்தி; கிடை : மேலே இக்கூறு மேலே கூறு இல. 1A/F9/U1 இன் கொங்கிறீட் தளத்தின் மத்தி சொல்லப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடம் இல. 2627 இற்கு அமைய நூற்றெழுபத்து நான்கு தசம் ஐந்து சதுர மீற்றர் (174.5 சதுரமீற்றர்) தளப்பரப்பு விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை காணி பதிவகத்தில் கூட்டாட்சி ஆதனம் எம் 24/33 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள இராஜகிரி, லேக் டிரைவ், வரிமதிப்பு இல. 115 10/1 ஐக் கொண்ட சொல்லப்பட்ட சுதந்திர குடியிருப்பு கூட்டாட்சி ஆதன கட்டிடத்தொகுதியுடன் தொடர்புபட்ட பொது மூலகங்களில் கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த 16774 பங்குகளில் பிரிக்கப்பட்ட 83 பங்குகளுடன் சேர்த்து.

மற்றும்

சொல்லப்பட்ட குடியிருப்பு கூட்டாட்சி ஆதன கூறிற்கு உட்பிரவேசிக்கின்ற எல்லா உபாயங்கள் மற்றும் அடித்தளத்தில் வாகன தரிப்பிடம் CE 33 இன் ஒரு (1) தாழ் அமைவின் பிரத்தியேக உரிமையுடன் சேர்த்து.

**பொது மூலகங்கள்**

இக்கட்டிட காணி கூட்டாட்சி ஆதனத்துடன் தொடர்புபட்ட திறந்த வெளிகளுக்கு உட்பட்டு இருக்கின்றது.

கட்டிடத்தின் கூரை, அடித்தளம், தூண்கள், தூலங்கள், உத்திரங்கள், தாங்கிகள் மற்றும் பிரதான சுவர்கள்

மின்சாரம், தொலைபேசி, வானொலி, வானொலி ஒலிபரப்பு கருவி, தொலைக்காட்சி, நீர்க்குழாய்கள், நீர்த்தாங்கிகள், நீர்ப்பம்பு அறை, குழிகள், வடிகால் வழிகள், பிரதான கழிவு குழிகள், குப்பை வெளியேற்றிகள் போன்ற மத்திய சேவைகளுக்கான நிறுவுதல்கள்.

அதன் இடங்களில் தங்கிவாழ்வோர்களுக்கு இருக்கின்ற பராமரிப்பு பாதுகாப்பு அல்லது பொது உபயோகத்திற்கான ஆதனத்தின் வசதிகள் அல்லது தேவைப்பாடுகளின் ஏனைய வசதிகள் யாவும்.

**குறிப்பிடத்தக்க பொது மூலகங்கள்**

CE1 கோபுரம் A மற்றும் கோபுரம் B எல்லா குடியிருப்பு கூறுகளுக்கும் உப்புகு வழி வழங்கி உடனடி பொது இடப்பரப்பாக இருக்கின்ற வரவேற்புப் பகுதி, வியாபார நிலையம், பாரங்தூக்கிகள், சேவைக்கான பாரங்தூக்கி, தாழ்வாரம், படிகட்டுக்கள், கட்டுப்பாட்டு அறைகள், வேலையாட்கள் அறைகள், களஞ்சியங்கள், தடுக்கும் குழிகள், பொது மேல்தளம் மற்றும் நான்கு காலி இடங்களை கொண்ட கோபுரம் A மற்றும் கோபுரம் B கட்டிடத்திற்கு பொதுவான தரை தளம்.

